**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 30.09.2019 ((முற்பகல்)**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம்.**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.NC 145/E/2017 (SA 14780/E/2015)/X**

திரு அ.பன்னீர் செல்வராசு ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 10.07.2015 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | இல்லை |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 29.10.2015 |

******

**ஆணை**

இன்று (30.09.2019) முற்பகலில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு அ.பன்னீர் செல்வராசு ஆஜரானார்.

பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி நா.உஷாராணி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 10.07.2015 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் காரைக்குடி வட்டம், பொய்யலூர் ஊராட்சி, வாரிவயல் குரூப், பாடத்தான்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கிராம மக்களால் அக்கிராமத்திலி உள்ள வீதி ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி கோட்டாடசியர் அவர்களிடம் மனுநீதி நாள் முகாமில் கொடுக்கப்பட்ட 09.06.2011 தேதியிட்ட கோரிக்கை மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக 7 இனங்களில் தகவலும், இனம் 8-ல் மேல்முறையீட்டு அலுவலரின் முகவரியைத் தகவலாகவும் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், காரைக்குடி என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் தேதியிடப்படாத, சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், காரைக்குடி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும், தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பினர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 29.10.2015 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், 28.02.2017 தேதியிட்ட ஆணை வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலை ஆணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்திரவிட்டுள்ளது. அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும், தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பினர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், தனக்கு இழப்பீடு பெற்றுத் தருமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 03.04.2017 தேதியிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (30.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க

பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், ஆணையத்தின் உத்திரவிற்கிணங்க 20.04.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

6. விசாரணையின்போது மேல்முறையீட்டாளர், தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க உத்திரவிடுமாறும், உரிய காலத்தில் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பினர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

7. ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு உரிய காலத்தில் தகவல் வழங்கப்படவில்லையென்பதும், முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்பதும் தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **மேல்முறையீட்டாளர் 10.07.2015 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை இனம்வாரியாக, முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

2. **மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவலை ஆணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் வழங்குமாறு 28.02.2017 அன்று ஆணையம் உத்திரவிட்டபின்னரும், உரிய காலத்தில், முழுமையான தகவல் வழங்காததற்குச் சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்கீழ் அதிகபட்ச அபராதம் ரூ.25,000/- ஏன் விதிக்கலாகாது என்பதற்கும், சட்டப்பிரிவு 20(2)-ன்கீழ் துறைரீதியான நடவடிக்கைக்கு உயரதிகாரிகளுக்கு ஏன் பரிந்துரைக்கக்கூடாது என்பதற்கும் உரிய விளக்கத்தைச் சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று, இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச்**

**சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

**ஓம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.NC 145/E/2017 (SA 14780/E/2015)/X**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்.

**மனுதாரர்**

திரு அ.பன்னீர் செல்வராசு,
பாடத்தான்பட்டி,
கல்லல் வழி,
சிவகங்கை மாவட்டம் - 630 305.

Copy to: Judgement File.
04/10/19